சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No: 211/2024

2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 02ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.P.பொன்னுத்தாய் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் கணேசன் (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அருப்புக்கோட்டை தாசில்தார் ஏற்படுத்திய பட்டா மாறுதல் உத்தரவு அசல் வா.சா.ஆ.1, தாவா 1வது லக்க சொத்தை காட்டக்கூடிய பிராது வரைபடம் அசல் வா.சா.ஆ.2, தாவா 2வது லக்க சொத்தை காட்டக்கூடிய பிராது வரைபடம் அசல் வா.சா.ஆ.3, தாவா 1வது லக்க சொத்திற்கு உரிய சொத்து மதிப்பு வழிகாட்டி பதிவேடு கணினி நகல் வா.சா.ஆ.4, தாவா 2வது லக்க சொத்திற்கு உரிய சொத்து மதிப்பு வழிகாட்டி பதிவேடு கணினி நகல் வா.சா.ஆ.5, கோதண்டம் செல்வி வகையறாவிற்கு எழுதிக்கொடுத்த பதிவு இனாம்செட்டில்மெண்டு

கணினி நகல் வா.சா.ஆ.6, முருகேசன் சந்திரன் வகையறாவிற்கு எழுதிக்கொடுத்த பதிவு இனாம்செட்டில்மெண்டு கணினி நகல் வா.சா.ஆ.7, சர்வே எண்.119/16C2 க்குரிய பட்டா எண்.3475 கணினி நகல் வா.சா.ஆ.8, சர்வே எண்.119/16C1 க்குரிய பட்டா எண்.2379 கணினி நகல் வா.சா.ஆ.9, சர்வே எண்.118/2B க்குரிய பட்டா எண்.3036 கணினி நகல் வா.சா.ஆ.10, சர்வே எண்.118/2A க்குரிய பட்டா எண்.827 கணினி நகல் வா.சா.ஆ.11, நீதிப்பேராணை மனு எண். WP (MD) No.6555/2024 இணையதள நகல் வா.சா.ஆ.12, காரியாபட்டி வட்டாட்சியர் வாதி வகையறாவிற்கு அளித்த அறிவிப்பு ஜெராக்ஸ் வா.சா.ஆ.13 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை :** இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.